# ஏப்ரல் – 01 – சனி

## புனித கியூக்

**கடவுள் நடுநிலை தவறாத நீதிபதி: நாள்தோறும் அநீதியைப் பொறுத்துக் கொள்ளாத இறைவன். திபா. 7:11**

## முதல் வாசகம்: ஏரேமியா 11:18 – 20

”ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார் நானும் புரிந்து கொண்டேன். பின்னர் நீர் அவர்களின் செயல்களை எனக்குக் காட்டினீர்.வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்படும் சாந்தமான செம்மறிபோல் இருந்தேன் அவர்கள் எனக்கு எதிராய், ”மரத்தைப் பழத்தோடு அழிப்போம் வாழ்வோரின் நாட்டிலிருந்து அவனை அகற்றிவிடுவோம் அவன் பெயர் மறக்கப்படட்டும்” என்று சொல்லிச் சதித் திட்டம் தீட்டியதை நான் அறியாதிருந்தேன்.படைகளின் ஆண்டவரே, நீர் நேர்மையோடு தீர்ப்பிடுபவர் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் சோதித்தறிபவர் நீர் அவர்களைப் பழிவாங்குவதை நான் காணவேண்டும். ஏனெனில், என் வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்

## நற்செய்தி : யோவான்7 : 40 - 53

கூட்டத்தில் சிலர் இவ்வார்த்தைகளைக் கேட்டு, ”வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே” என்றனர்.வேறு சிலர், ”மெசியா இவரே” என்றனர். மற்றும் சிலர், ”கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்?தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த பெத்லகேம் ஊரிலிருந்தும் மெசியா வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது?” என்றனர்.இப்படி அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது.சிலர் அவரைப் பிடிக்க விரும்பினர். ஆனால் யாரும் அவரைத் தொடவில்லை.தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அனுப்பியிருந்த காவலர்கள் அவர்களிடம் திரும்பி வந்தார்கள். அவர்கள் காவலர்களிடம், ”ஏன் அவனைப் பிடித்துக்கொண்டு வரவில்லை?” என்று கேட்டார்கள்.காவலர் மறுமொழியாக, ”அவரைப் போல எவரும் என்றுமே பேசியதில்லை” என்றனர்.பரிசேயர் அவர்களைப் பார்த்து, ”நீங்களும் ஏமாந்து போனீர்களோ?தலைவர்களிலாவது பரிசேயர்களிலாவது அவனை நம்புவோர் யாராவது உண்டா?இம்மக்கள் கூட்டத்துக்குத் திருச்சட்டம் தெரியாது. இவர்கள் சபிக்கப்பட்டவர்கள்” என்றனர்.அங்கிருந்த பரிசேயருள் ஒருவர் நிக்கதேம். அவரே முன்பு ஒரு நாள் இயேசுவிடம் வந்தவர். அவர் அவர்களிடம்,”ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா?” என்று கேட்டார்.அவர்கள் மறுமொழியாக, ”நீரும் கலிலேயரா என்ன? மறைநூலைத் துருவி ஆய்ந்து பாரும். அப்போது கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் யாரும் தோன்றுவதில்லை என்பதை அறிந்துகொள்வீர்” என்றார்கள்.

**தியானம்:** 2017ம் ஆண்டின் 4ம் மாதத்தில் கால் பதிக்கின்றோம். இந்த நல்ல நாள் வரைக்கும் எம்மை பாதுகாத்துப், பராமரிக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு முதலில் நன்றி தெரிவித்து, இந்த மாதத்தில் பரிசுத்த வாரத்திற்குள் எம்மைத் தகுந்த முறையில் வழிநடத்த வேண்டுமென வேண்டுவோம். எத்தகைய குற்றவாளியாக இருந்தாலும், வாக்குமூலத்தை வாங்காது, அல்லது அவரது செயல்களை ஆராயாது தீர்ப்பிடுவது தவறென நற்செய்தி தெரிவிக்கின்றது. அதிகாரம், பணபலம், சாதியம், பதவி எனப்பல முன்னிலைப்படுவதால் வாக்குமூலத்தை வாங்காது, குற்றத்தை உறுதிப்படுத்தாது அப்பாவிகளைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடுவது இயேசுவின் காலத்திலிருந்தே தொடருவதனால், அப்பாவிகள் தண்டிக்கப்படுவது சாதாரணமாகிவிட்டது. பிறரைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடும் அதிகாரம் நமக்கு இல்லையென்ற இயேசுவின் கூற்றையும் நாம் உணர்ந்து கொள்ள நற்செய்தி எமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவின் போதனை அனைத்து ஆற்றல்களையும் தன்னகத்தே கொண்டது. இன்றைய நற்செய்தியில் அப்படிப்பட்ட வல்லமையான போதனையைக் கேட்டவர்கள் “அவரைப் போல எவரும் என்றுமே பேசியதில்லை” என்கின்றனர். நற்செய்தியின் பல பகுதிகளில் இத்தகைய உண்மையை நாம் அறியலாம். “இது என்ன? இது அதிகாரம் ˙கொண்ட போதனையாய் இருக்கின்றதே (மாற்கு1:27) எனவும், “நானாக எதையும் பேசவில்லை. மாறாக, என்னை அனுப்பிய தந்தையே நான் என்ன பேசவேண்டும், என்ன சொல்ல வேண்டும் என்பது பற்றி எனக்குக் கட்டளையிடுகின்றார்” (யோவான் 12:49) என்னுமளவுக்கு இயேசுவின் போதனை வல்லமை நிறைந்ததாக இருக்கின்றது. “உ(எ)ங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், ஆவிக்குரிய பாடல்கள் இடம்பெறட்டும்” (எபேசியர் 5:19) என்பதற்கமைய, நாமும் பிறருக்கு வாழ்வளிக்கும் வார்த்தைகளைப் பேசுவோம் இறைவனை புகழ்ந்து போற்றுவோம். இறையருளை நிறைவாய் பெறுவோம்.